மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதாகும். அவர்களுக்காக நாம் ஆண்டு ஒன்றுக்கு செலவழிக்கும் தொகை மட்டும் 92,29,000 ரூபாயாகும். தொடராச் செலவினம் என்று சொன்னால், கட்டடங்கள் கட்டுவதற்கு 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவாகிறது. மேற்கொண்டு, அதற்குரிய தளவாடச் சாமான்கள், கணினி, மேசை, நாற்காலி, அலுவலகச் செலவினம் போன்றவற்றிற்கு 30,50,000 ரூபாய் தேவைப்படுகிறது. ஆக மொத்தம், ஒரு கல்லூரி ஆரம்பித்து அது நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று சொன்னால், செலவினமாக ஓர் ஆண்டிற்கு கட்டடங்கள் கட்டுவதையும் சேர்த்து 8 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவாகிறது. மேலும், நிலம் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலையும் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற பகுதி நகராட்சிப் பகுதியாகும். அந்தப் பகுதியிலே 3 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்வாரேயானால், அந்த இடத்திற்கு நகராட்சியின் அனுமதி பெற வேண்டும். பூந்தமல்லியில் அதிகப் பள்ளிகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தப் பள்ளிகளோடு மட்டுமல்லாமல், கல்லூரியும் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சொல்கிறார்கள். இக்கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

புதிய கட்டடம்

***34897—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 ஆகஸ்ட் 27]

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கீழ்புளியம்பட்டு ஊராட்சி, எய்யலூர் கிராமத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியிலுள்ள எய்யலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றை இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்கெனவே கட்டிக் கொடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது இச்சங்கத்தின் அலுவலகக் கட்டடம் பழுதடைந்துள்ளதால், புதிய அலுவலகக் கட்டடம் கட்ட கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து 6,84,000 ரூபாய் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் 17-8-2015 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணிகளுக்கு இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, விரைவில் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழகக் கூட்டுறவுத் துறைக்கு, இந்தியாவிலே எந்த ஒரு மாநில முதலமைச்சரும் செய்யாத அளவில், ஒரே ஆண்டில் 1,166 கிடங்குகளைக் கட்டிக் கொடுத்த ஒரே முதலமைச்சர், வரலாற்றுச் சிறப்புமிக்க நம் தாய் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 3,317 கிடங்குகளை இந்தக் கூட்டுறவுத் துறைக்காக கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

நியாய விலைக் கடைகளுக்கு 1,294 கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்

திட்டத்தின்மூலம் கூட்டுறவுத் துறையின் பல்வேறு பிரிவுகளுக்கு 561 கிடங்குகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில் இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதனுடைய கிளைகளுக்கு 43 கட்டடங்கள் புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பொறுத்தமட்டில், 16 சங்கங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலைகளுக்கும், பிரதம கூட்டுறவுப் பண்டகச் சாலைகளுக்கும், ஆக, இரண்டுக்கும் 9 கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 5 கட்டடங்கள் இதர சங்கங்களுக்கு, பல்வேறு பிரிவுகளுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டு, ஏறத்தாழ இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த கூட்டுறவுத் துறை வரலாற்றில், இதுவரையில் இல்லாத அளவில் 5,245 புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைமகளாய் கழகத்தை வழிநடத்தி, அலைமகளாய் ஆர்ப்பரித்து, அரும்பணியாற்றி, அரசியல் அதிசயமாய், சூதுமதி கொண்டோரின் சூழ்ச்சிகளை சிதறடித்து, சுயம்பாய் சூரியனை சுட்டெரித்து, மக்கள் நெஞ்சங்களில் மலைமகளாய், (மேசையைத் தட்டும் ஒலி) ஆர்.கே. நகர் தொகுதியின் வெற்றித் திருமகளாய், தமிழ்த்தாயின் தலைமகளாய் விளங்குகிற மாட்சிமை தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களை பணிவோடு வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, கீழ்புளியம்பட்டு ஊராட்சியில் உள்ள எய்யலூர் தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூபாய் 6.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். காட்டுமன்னார்கோவில் நகரில் அமைந்திருக்கிற கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

159—

புதிய திருத்தேர்

***39087—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கரியாப்பட்டிணத்திலுள்ள அருள்மிகு சந்தனமாரியம்மன் திருக்கோயிலுக்குப் புதிய திருத்தேர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம், எங்கள் குல தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய விடையைத் தொடங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கரியாப்பட்டிணத்திலுள்ள அருள்மிகு சந்தனமாரியம்மன் திருக்கோயிலுக்குப் போதுமான வருவாய் மற்றும் நிதி வசதி